# Rettigheder og pligter i folkeskolen

# ஒரு பாடசாலையில் கடமைகளும் உரிமைகளும்

**Tamil/ தமிழ்**

## முன்னுரை

பாடசாலையானது மாணவர்களின் கல்வித்திறனை வளம்படுத்தவேண்டும். சுதந்திரம், சனநாயகம் என்பவற்றை இயல்பாகக்கொண்டுள்ள டெனிஷ் சமுதாயத்தின் விதிமுறைகளையும், பெறுமதிகளையும் மாணவர்கள் சரளமாக புரிந்து கொள்வது பாடசாலையில் இடம்பெறவேண்டும்.

வகுப்பு நேரங்களில் மாணவர்கள் சுதந்திரத்தையும் சனநாயகத்தையும் பற்றி அறிகிறார்கள். அத்துடன் பாடசாலையின் நாளாந்த செயற்பாடுகள் சமத்துவ சனநாயக கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

ஒரு சனநாயக அமைப்பில் எல்லோருக்கும் கடமைகளும் உரிமைகளும் இருப்பது போல் பாடசாலைக்கும், பெற்றோருக்கும், மாணவர்களுக்கும்கூட கடமைகளும் உரிமைகளும் உண்டு. மாணவர்களின் சமூகவளர்ச்சி, படிப்புத்திறன் ஆகியவற்றை உருவாக்குவதில் பாடசாலை, பெற்றோர்கள், மாணவர்கள் அனைவருக்கும் பங்கு உள்ளது.

மேற்குறிப்பிட்ட சம்பந்தப்பட்ட அனைவரும் தங்கள் உரிமைகள், கடமைகளைப்பற்றி அறியும்போது யார் எதைச்செய்யவேண்டும் என்பது தெளிவாகிறது. இவ்வாறே புரிந்துணர்வுக்கும் ஒத்துழைப்புக்குமான அத்திவாரக்கல் இடப்படுகிறது.

இந்தத் தகவற் பத்திரிகை பெற்றோருக்கும், பாடசாலைக்குமிடையேயான ஒத்துழைப்பு சம்மந்தமான ஒரு கருவியாக நினைத்து வெளியிடப்படுகிறது.

இந்தத் தகவல் பத்திரிகையின் இறுதிப்பகுதியில் பாடசாலைக்குரிய விதிமுறைகளும் வேறு வெளியீடுகள் பற்றிய தகவல்களும் உள்ளன.



Ulla Tørnæs

# பாடசாலையின் பணிகள்

ஒரு பாடசாலையானது பாடசாலைக்கான சட்ட விதிமுறைகளுக்குட்பட்டு (folkeskolelovens bestemmelser) இயங்கவேண்டும். உதாரணத்திற்கு ஒரு பாடசாலையின் கடமைகள் சட்ட விதிமுறைகளின்படி பின்வருமாறு வரையறுக்கப்பட்டுள்ளது:

- ஒவ்வொரு மாணவரினதும் கல்வித்தேவைகள் நிறைவு செய்யப்படும் வகையிலும், தகுதிகள் கூடியபட்சம் பயன்படுத்தப்படும் வகையிலும் கற்பித்தல் அமையவேண்டும்
- சுதந்திரம், சனநாயகம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ள டெனிஷ் சமுதாயத்தில் பொறுப்புகள், உரிமைகள், கடமைகள், தீர்மானங்கள் எடுப்பதில் பங்காற்றுதல் ஆகியவற்றிற்கு மாணவர்களை தயாராக்குதல்
- கற்பித்தலானது அறிவுச்சுதந்திரம், சமத்துவம், சனநாயகம் ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டதாக அமையவேண்டும்
- மாணவர்களின் தனிமனித, கல்வி முன்னேற்றங்கள் சம்மந்தமாக பெற்றோருடன் சேர்ந்து உழைக்க வேண்டும்.



# அதாவது....

பாடசாலையில் மிக முக்கியமானது பாடங்களின் உள்ளடக்கம் ஆகும். ஒவ்வொரு மாணவரதும் கல்வித்தேவைகள் நிறைவு செய்யப்படவேண்டும். ஒவ்வொரு மாணவரினதும் கல்வித்தேவைகள் நிறைவுசெய்யப்படும் வகையிலும், தகுதிகள் கூடியபட்சம் பயன்படுத்தப்படும் வகையிலும் கற்பித்தல் அமையவேண்டும். மாணவர்கள் கற்றுக்கொள்ளும் முறைகளும் கற்றுக்கொள்ளும் துரிதமும் வித்தியாசமானவை. அதுமட்டுமின்றி பிள்ளைகளின் பலதரப்பட்ட தேவைகள் வகுப்புக்கு வகுப்பு வேறுபடும். இந்த வேறுபாடுகள் பாடசாலைகளின் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்.

பாடசாலைகளின் முக்கிய குறிக்கோளானது மாணவர்களுக்கு கற்பித்தலும் அவர்களை உருவாக்குதலும் ஆகும். இது மாணவர்களை வருங்காலத்தில் டெனிஷ் சமுதாயத்தில் சிறந்த குடிமக்களாக உருவாக்கும். மேலும் இயன்றவரை சனநாயக சமுதாயத்தில் அவர்களை நன்கு செயல்படவும், அர்த்தமுள்ள வாழ்க்கையொன்றை பெறுவதற்கும், சிறந்த முறையில் வழிநடக்கவும் தயார்படுத்தும்.

ஆகவே மாணவர்கள் முக்கியமாக கற்றுக்கொள்பவை:

- சுதந்திரம் மற்றும் சனநாயகத்தை அடிப்படையாகக் கொண்ட டெனிஷ் சமுதாயத்தில் தீர்மானங்களில் பங்கேற்பது, பொறுப்புகளை ஏற்பது என்றால் என்ன என்பதையும் மற்றும் உரிமைகள், கடமைகள் என்பவற்றையும் மாணவர்கள் புரிந்து கொள்ளவேண்டும்.
- சமத்துவம், அறிவுச்சுதந்திரம், சனநாயகம் ஆகியவற்றை கொண்ட ஒரு பொது அமைப்பில் இயங்குவதற்குக் கற்றுக்கொள்ள வேண்டும்.
- டெனிஷ் சமுதாயத்தில் சகஜமாக பழகுவதற்கு கற்றுக் கொள்ளவேண்டும்.
- வேறு கலாச்சாரங்களையும் பற்றி அறிந்துகொள்ளவேண்டும்.

ஒவ்வொரு தனி மாணவரதும் தகுதிகள், தற்போதைய முன்னேற்றநிலை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு கற்பித்தல்முறை அமையவேண்டும். இதன் மூலமாக மாணவர்களை தனிமனித முன்னேற்றத்திலும் கல்வியிலும் நன்றாக அபிவிருத்தியடையச்செய்யலாம்.

பெற்றோருக்கும் பாடசாலைக்குமிடையே ஒரு நெருங்கிய ஒத்துழைப்பு முக்கியமானதாகும். இதன்மூலம் மாணவர்கள் பாடசாலைக் கல்வியிலிருந்து அதிக பயனை அடைவர். மேலும் இது பாடசாலைக்கு மாணவர்கள் எதில் ஈடுபடுகிறார்கள், எதில் நன்கு செயல்படுகிறார்கள், புதிய விடயங்களை எவ்வாறு நன்கு புரிந்து கற்றுக்கொள்கிறார்கள் போன்றவற்றை தெளிவுப்படுத்தும். மாணவர்களைப்பற்றிய இந்த அறிவு ஆசிரியர்களுக்கு கற்பிக்கும் முறையைத் தயார்செய்வதற்கு உதவும். பாடசாலைக்கும் பெற்றோருக்கும் இடையேயான கூட்டுழைப்பு பாடசாலையின் நாளாந்த இயக்கம் பற்றிய விளக்கத்தை பெற்றோருக்கு அளிக்கிறது. ஆகவே பெற்றோருக்கான கூட்டங்கள், பாடசாலைக்கும் வீட்டிற்குமிடையேயான கலந்துரையாடல்கள் மற்றும் வேறு செயற்பாடுகளுக்கும் பெற்றோரை பங்கு பெறவைப்பதற்கு பாடசாலை பிரயத்தனம் செய்ய வேண்டியது முக்கியமாகும்.

# பாடசாலையின் கடமைகள்

- பாடசாலையின் கற்பிப்புமுறை அதன் விதிமுறைகளுக்குள் அடங்கியதாகவும், அதன் குறிக்கோளை நோக்கியதாகவும் அமையவேண்டும்
- பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை பாதுகாப்புணர்வுடன் ஒப்படைக்கும் வகையில் பாடசாலையானது மாணவர்களை நன்கு கவனிக்கவேண்டும்
- பாடசாலையின் அனுமதியின்றி மாணவர்கள் பாடசாலைக்கு வராமல் இருந்தால் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கவேண்டும்
- உதாரணமாக ஒரு மாணவர் 3 வாரங்களுக்கு மேல் உடல்நலமின்றி வீட்டில் இருக்க நேர்ந்தால் அம்மாணவருக்கு அத்தியாவசியமான பாடங்களைக் கற்பிக்கவேண்டும்
- ஒரு ஒழுங்கு முறையை பாடசாலையில் உருவாக்கவேண்டும்
- பிள்ளைகளின் இயல்பான உள, உடல் வளர்ச்சிக்கு பாதகம் ஏற்படின் சமூக சேவை அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவேண்டும்



# அதாவது....

ஒவ்வொரு பாடசாலையும், folkeskolen இன் குறிக்கோள்களுக்கு ஏற்றவாறு தகுதியான கற்பித்தலை அமைத்து வழங்கக்கடமைப்பட்டுள்ளது. இது பாடசாலையின் சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டதாக அமையவேண்டும்.

பாடசாலையானது மாணவர்களை பாடநேரம், இடைவேளை, உணவு இடைவேளை ஆகியவற்றில் மேற்பார்வை செய்யவேண்டும். கல்வி கற்பிக்கப்படும் நேரம் பாடநேரம் எனப்படும். இது பாடசாலையில் காலஅட்டவணையின்படி நடைபெறும் அல்லது பாடசாலைக்கு வெளியே முகாம்பாடசாலைகள் (lejrskoler) போன்ற இடங்களிலும் நடைபெறும்.

மாணவர்கள் சரியான காரணமின்றி பாடசாலைக்கு வராதிருந்தால் பாடசாலை நடவடிக்கை எடுக்கவேண்டும். இதை சாதாரணமாக பெற்றோரைத் தொடர்பு கொள்வதன்முலம் செயற்படுத்தலாம். ஆனால் மாணவர் ஒருவர் நீண்டகாலம் பாடசாலைக்கு வருகை தராமல் இருந்தால் சமூகசேவை அலுவலுகத்துடன் தொடர்பு கொண்டு வருகை தராமல் இருப்பதற்குரிய காரணம் என்ன என்பதை அறியலாம். ஒரு மாணவர் சமயச்சடங்குகள் அல்லது குடும்பத்தில் நடக்கும் விசேடங்கள் போன்ற காரணங்களால் வருகை தராமல் இருக்க விரும்பின் பாடசாலை அதிபரிடம் அனுமதிபெறவேண்டும்.

ஒரு மாணவர் மூன்று வாரங்களுக்கு மேல் உடல்நலமின்மை காரணமாக வருகை தராதிருந்தால் பாடசாலையானது அத்தியாவசியமான பாடங்களை வீட்டிலேயே கற்பிக்க வசதி செய்யவேண்டும்.

கற்பித்தல் ஒழுங்காக நடைபெறுவதற்கும், மாணவர்கள் அனைவரும் திருப்திகரமாக இயங்குவதற்கும் பாடசாலையானது பொறுப்பாக இருக்கவேண்டும். இதற்கு உதாரணமாகக் கூறப்போனால் மாணவர் ஒருவர் மற்ற மாணவர்களால் கடுமையாக பரிகாசப்படுத்தப்படும்போது பாடசாலை தலையிட்டு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

3ஆம் வகுப்புக்கும் 10ஆம் வகுப்புக்கும் இடைப்பட்ட மாணவர்கள் பாடசாலையின் ஒழுங்கு விதிகளை மீறி நடந்தால் பாடசாலை உதாரணமாக கீழ்வரும் நடவடிக்கைகளை எடுக்கலாம்:

- ஒரு வாரம்வரை மாணவரை வகுப்பிலிருந்து வெளியேற்றலாம்
- அதே பாடசாலையில் ஒத்த தரமுள்ள வேறு வகுப்புக்கு மாற்றலாம்
- ஒத்த தரமுள்ள வகுப்புக்கு, ஆனால் வேறு பாடசாலைக்கு மாற்றலாம்

இப்படியான நடவடிக்கைகளை பெற்றோரிடம் உரையாடிய பிறகு அல்லது மாணவரின் வீட்டிற்கு இதுபற்றி தெரிவித்த பின்பே எடுக்கலாம்.

ஒரு பிள்ளையின் உடல் மற்றும் உள முன்னேற்றத்திற்கு பாதகம் ஏற்படுகின்றது என அறியப்பட்டால், சகல குடிமக்களும் இது பற்றி சமூகசேவை அலுவலகத்துக்குத் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளனர். இதே கடமை பாடசாலையில் பணிபுரிபவர்களுக்கும் உண்டு. ஆனால் இவர்கள் இன்னும் விசேட அக்கறையோடு சமூகசேவை அலுவலகத்துக்கு தெரிவிக்க கடமைப்பட்டுள்ளனர்.

# பள்ளிமாணவர்களின் உரிமைகள்

பள்ளிமாணவர்களுக்கு சட்டப்படி பின்வரும் உரிமைகள் உண்டு:

- பாடசாலைகளில்(folkeskolen) இலவசக்கல்வி
- வட்டாரப்பாடசாலைகளில்(distriktsskolen) கல்வி கற்றல்(விசேடகல்வி பெறுவதற்கும் (specialundervisning), தயார்படுத்தும் வகுப்பு களுக்கும்(modtagelsesklasser) விசேடமான விதி முறைகளுண்டு)
- ஒரு மாணவர் வட்டாரப்பாடசாலைக்கோ அல்லது வேறுபாடசாலைக்கோ அனுப்பப்பட்டால் இலவசப் போக்குவரத்து வசதி
- மேலதிக கற்பிப்பு
- தேவைக்கேற்றவாறு விசேட கல்வி
- இரண்டாவது மொழியாக டெனிஷ் மொழி படித்தல்
- தாய்மொழிக்கல்வி (EU, EØS, Færøerne மற்றும் கிரீன்லாந்து பிள்ளைகளுக்கு மட்டுமே இந்த உரிமையுண்டு)
- மாணவர்சபை அமைத்தல்
- பாடசாலை மாறுதல்



## அதாவது....

சகல மாணவர்களும் வருடத்திற்கு 200 நாட்களுக்கு பாடசாலையில் (folkeskolen) இலவசக்கல்வி பெற உரிமையுண்டு. 10ஆம் வகுப்பு மாணவருக்குக்கூட இந்த உரிமையுண்டு. பாலர் வகுப்பின் (børnehaveklasser) பாடசாலை நாட்கள் 195ஆக குறைக்கப்படலாம். கற்பித்தலுக்கு அவசியமான அனைத்து தேவைகளும் இலவசமாக வழங்கப்படவேண்டும். சாதாரண கற்பித்தலினால் ஏற்படும் செலவீனங்களை பெற்றோரிடம் கோரமுடியாது. ஆனால் சுற்றுலா, முகாம் பாடசாலை (lejrskolen) போன்றவற்றால் ஏற்படும் உணவு சம்மந்தமான செலவுகள் இதற்கு விதிவிலக்காகும்.

ஒரு மாணவர் தனது வசிப்பிடத்துக்குரிய பாடசாலை வட்டாரத்தில் உள்ள ஒரு பாடசாலையில் சேர்க்கப்படுவார். சகல மாணவர்களுக்கும் வட்டார பாடசாலைகளில் (distriktsskolen) கல்வி பெற உரிமையுண்டு. தயார்படுத்தும் வகுப்புகள் (modtagelsesklasser) அல்லது இதுமாதிரியான வேறு ஏதாவது வகுப்புகளை முடித்தவர்களுக்கும் இந்த உரிமையுண்டு. வட்டாரப்பாடசாலையைத் தவிர்ந்த வேறு ஒரு பாடசாலை ஒரு மாணவரை ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில் அப்பாடசாலையைத் தெரிவு செய்ய அம்மாணவருக்கு சந்தர்ப்பமுண்டு.

நகரஇயக்குனர்சபை (kommunalbestyrelsen) இலவச போக்குவரத்து வசதிகளை தொலைவில் வசிக்கும் மாணவர்களுக்கு பின்வரும் விதிகளின்படி செயற்படுத்தவேண்டும்.

- பாலர்வகுப்பிலிருந்து 3ஆம் வகுப்பு வரைக்கும்: 2½ கிலோமீட்டருக்குமேல்
- 4ஆம் வகுப்பிலிருந்து 6ஆம் வகுப்பு வரைக்கும்: 6 கிலோமீட்டருக்கு மேல்
- 7ஆம் வகுப்பிலிருந்து 9ஆம் வகுப்பு வரைக்கும்: 7 கிலோமீட்டருக்கு மேல்
- 10ஆம் வகுப்பிற்கு: 9 கிலோமீட்டருக்கு மேல்

மேலே குறிப்பிட்ட தூரங்களைவிட அருகாமையில் வசிக்கும் ஒரு மாணவரின் பாடசாலைக்கு செல்லும் பாதை அபாயமானதாக இருந்தாலோ அல்லது ஒரு மாணவருக்கு இலவச போக்குவரத்து வசதியளிக்கப்பட்டால் மாத்திரமே அவரால் கல்வி கற்க முடியும் என்ற நிலை இருந்தாலோ அவர்களுக்கு இலவச போக்குவரத்து வசதியளிக்கப்படவேண்டும். நகரஇயக்குனர் சபையே இது பற்றி ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் முடிவு எடுக்கும். ஆனால் பாடசாலையின் வட்டாரத்துக்குள் வசிக்கும் மாணவர்களுக்கு மட்டுமே இந்த உரிமையுண்டு.

ஒரு மாணவர் பாடசாலையை மாற்றும்பொழுது புதிய பாடசாலையின் படிப்பு சூழலுக்கேற்றவாறு தயாராகும்வரை அம்மாணவருக்கு விசேசமான கல்விவசதி வழங்கப்பட வேண்டுமா என்று இந்த புதிய பாடசாலை மதிப்பீடு செய்யும். மாணவர்கள் சுகயீன காரணத்தால் பாடசாலைக்கு வருகை தராமலிருந்தால் அவர்களுக்கு பாடசாலை பாட உதவி வழங்கலாம்.

ஒரு மாணவருக்கு தேவைப்பட்டால், விசேட கல்வி உதவி அல்லது வேறு விசேட வழிநடத்தல் உதவி (specialpædagogisk bistand) பெற உரிமையுண்டு. இதற்கு உதாரணமாக போக்குவரத்து உதவியைக் குறிப்பிடலாம். Pædagogisk- psykologisk rådgivning, பாடசாலை, பெற்றோர் ஆகியோர் கலந்தாலோசிப்பதன் மூலம் ஒரு மாணவருக்கு அளிக்கக்கூடிய மிகச்சிறந்த உதவிகள் எவை என்பதை மதிப்பிடலாம். இதன்பின்னர் பாடசாலை அதிபர் எப்படிப்பட்ட உதவிகள் வழங்கப்படவேண்டும் என்பதைத் தீர்மானிப்பார்.
ஒவ்வொரு பாடசாலையிலும் 5ஆம் வகுப்புக்கும் அதற்கு மேற்பட்ட வகுப்புக்கும் மாணவர்சபை (elevråd) அமைக்க உரிமையுண்டு.

டெனிஷ் மொழியைவிட வேறு மொழியைத் தாய்மொழியாகக் கொண்டுள்ள மாணவர்கள் இருமொழி பேசும் மாணவர்கள் எனப்படுவர். இருமொழி பேசும் மாணவர்களுக்கு பாலர் வகுப்பிலிருந்து 10ஆம் வகுப்புவரை தேவைக்கேற்ப டெனிஷ் மொழி இரண்டாவது மொழியாக கற்பிக்கப்படுகிறது. இவர்கள் பாலர் பாடசாலையிலோ (børnehave) அல்லது பாடசாலையிலோ தொடங்கும்பொழுது முதலில் டெனிஷ் மொழி கற்றுக்கொள்வர். EU, EØS நாடுகளிலோ அல்லது கிரீன்லாந்து ஃபெய தீவுகளை (Færøerne) சொந்த நாடாகக்கொண்டவர்களுக்கு குறிப்பிட்ட சில சந்தர்ப்பங்களில் அவர்களது அரசகரும மொழியைக்கற்க உரிமையுண்டு.

# பெற்றோரின் உரிமைகள்

பின்வரும் செயற்பாடுகளுக்கு பெற்றோருக்கு உரிமைகள் உண்டு:

- பாடசாலையில் பணிபுரிபவர்கள், பாடசாலை அதிபர், பாடசாலை இயக்குனர்சபை (skolebestyrelsen) ஆகியவர்களை தொடர்புகொள்ளுதல்
- மாணவரின் கல்வி வளர்ச்சிபற்றி அவ்வப்போது அறிந்து கொள்ளுதல்
- பாடசாலையின் அனுமதியுடன் படிப்பித்தலை பார்வையிடுதல்
- பாடசாலை இயக்குனர்சபைத்தேர்வுக்கு வாக்களித்தல் மற்றும் சபைப்பிரதிநிதியாக தேர்தலில் போட்டியிடுதல்
- மாணவர் சம்மந்தமான பாடசாலை அதிபரின் தீர்மானத்தில் அதிருப்தி இருப்பின் அதை எதிர்த்து நகர இயக்குனர் சபைக்கு(kommunalbestyrelsen) முறையீடு செய்தல்
- பாடசாலை பணிகள் சம்மந்தமாக அறிவுரை வழங்கல்
- தங்கள் பிள்ளைகளை கிறிஸ்தவ சமயபாடத்திலிருந்து விடுபட வைத்தல்
- Folkeskolen கல்வியைத்தவிர வேறு பாடசாலைகளில் கற்பித்தல்



# அதாவது....

பிள்ளைகளின் படிப்பு சம்மந்தமாக அல்லது பாடசாலையின் பணிகள் சம்மந்தமாக ஏதாவது கேள்விகள் இருப்பின் பெற்றோருக்கு பாடசாலையின் அதிபரை, பாடசாலை இயக்குனர்சபையை அல்லது பாடசாலையில் பணிபுரிபவர்களை தொடர்புகொள்ள உரிமையுண்டு.

பிள்ளைகளின் பாடசாலைப் பருவம் எப்படி நடக்கிறது, அவர்கள் எவ்வாறு தனிப்பட்டரீதியாக, பாடரீதியாக, சமூகரீதியாக கல்வியைப்பெறுகிறார்கள் என்பதை அறிவதற்கு பெற்றோருக்கு உரிமையுண்டு. பாடசாலை இயக்குனர்சபை இது சம்மந்தமாக அவ்வப்போது எவ்வாறு பெற்றோருக்கு அறிவிக்கவேண்டும் என்பதுபற்றி விதிமுறைகளை உருவாக்குவர்.

ஒரு பாடசாலையில் பெற்றோர் படிப்பித்தலைப் பார்வையிடலாம் என்ற ஒழுங்கு முறைகள் இருப்பின், பெற்றோர்கள் எப்போது, எவ்வாறு பார்வையிடலாம் என்பதை பாடசாலையுடன் பேசி ஒப்பந்தம் செய்து கொண்டு பார்வையிடலாம்.

பெற்றோர்களுக்கு பாடசாலை இயக்குனர்சபைத்தேர்தலில் வாக்களிக்கவும், பிரதிநிதியாகப் போட்டியிடவும் உரிமையுண்டு.

ஒரு மாணவர் சம்மந்தமாக பாடசாலை அதிபரின் தீர்ப்பு பெற்றோருக்கு அதிருப்தியை அளிப்பின், பெற்றோர்கள் அத்தீர்மானத்தை எதிர்த்து நகர இயக்குனர்சபைக்கு(kommunalbestyrelsen) நான்கு வாரங்களுக்குள் முறையிடுவதற்கு உரிமையுண்டு. நகர இயக்குனர்சபையே இது பற்றி இறுதி முடிவை எடுக்கும்.

சகல பெற்றோருக்கும் தங்கள் பிள்ளைகளின் பாடசாலை சம்மந்தப்பட்ட பலதரப்பட்ட தேவைகளை, பாடசாலை எவ்வாறு கவனத்தில் எடுக்கலாம் என்பதுபற்றி கலந்துரையாட அனுமதியுண்டு.

கிறிஸ்தவ சமயபாடம் மிகவும் முக்கியமானது, ஏனெனில் இது பொதுவான மனித சமுதாயத்தைப்பற்றியதாகும். மனித வாழ்க்கையைப்பற்றிய கலந்துரையாடல்கள் கேள்விகள் கிறிஸ்தவ சமயத்திலோ அல்லது வேறு சமயங்களிலோ எழுவதுண்டு. இது சமயபோதனையல்ல ஆனால் சமயத்தின் உள்ளடக்கத்தை மட்டுமே பற்றிய படிப்பாகும். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் சமயப்படிப்புக்கு தாங்களே பொறுப்பு என எழுத்து மூலம் உறுதியளிப்பின் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை கிறிஸ்தவ சமயபாடத்திலிருந்து விலக்கிக்கொள்ளமுடியும்.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு folkeskolen தவிர்ந்த வேறு பாடசாலையையும் தெரிவு செய்யலாம். இதற்கு உதாரணமாக தனியார் பாடசாலையை கூறலாம். ஆனால் பாடத்திட்டம் folkeskolen இல் நடைபெறும் படிப்பினை ஒத்ததாக இருக்கவேண்டும்.

# பெற்றோரிடமிருந்தும் பிள்ளைகளிடமிருந்தும் பாடசாலை கோருபவை

- கட்டாயக்கல்வி நிறைவுபெற ஒத்துழைத்தல்
- பாடசாலையுடன் ஒத்துழைத்தல்
- மாணவரின் வரவின்மை பற்றிய சரியான காரணத்தை அறிவித்தல்
- பாடசாலை நன்றாக இயங்குவதற்கு தங்களின் பங்களிப்பினை செலுத்துதல்



# அதாவது....

மாணவர்கள் கட்டாயக்கல்வி 9ஆண்டுகள் கற்கவேண்டும். ஒரு மாணவர் 6 அல்லது 7 வயதிலிருந்து folkeskole யிலோ அல்லது அதே தரம் உள்ள ஒரு வேறு பாடசாலையிலோ படிக்கவேண்டும்.

சகல வகுப்பு மாணவர்களும் சகல பாடநேரங்களிலும் பங்கு பெறவேண்டும். தகுந்த காரணமிருந்தால் வகுப்புக்கு வராமல் இருக்க அனுமதியளிக்கலாம். பாலர் வகுப்பும்(børnehaveklasse) 10ஆம் வகுப்பும் கட்டாயக்கல்விக்குள் அடங்காத வகுப்புகளாயிருந்தாலும்கூட இவ்வகுப்புகளிலும் மாணவர்கள் பாடநேரங்களில் பங்குபெறவேண்டும்.

மாணவர்களின் முன்னேற்றத்தைப்பற்றிய அனுபவங்கள், தகவல்கள், கருத்துக்கள் போன்றவற்றை சமத்துவமாக பாடசாலையும் பெற்றோரும் பரிமாறிக்கொள்ளும் பொழுதும், பெற்றோர்கள் மிகுந்த ஈடுபாடுடன் பாடசாலையுடன் செயற்படும் பொழுதும், பாடசாலைக்கும் பெற்றோருக்குமிடையே நல்ல கூட்டுழைப்பு உருவாகின்றது. பாடசாலையும் பெற்றோரும் தங்களுக்கிடையேயுள்ள எதிர்பார்ப்புகள்பற்றி ஒரே கருத்துக்களைக் கொண்டிருப்பது முக்கியமாகும். மேலும் பெற்றோர்கள் எவ்வாறு தங்கள் ஒத்துழைப்பை பாடசாலைகளில் பணிபுரிவர்களுக்கு அளிப்பது என்பதுபற்றி கலந்துரையாடுவது அத்துடன் முக்கியமாகும்.

பாடசாலைக்கும் வீட்டிற்குமிடையான கூட்டுழைப்பு அதன் உள்ளடக்கரீதியிலும், முறையிலும் மிகவும் பரவலானது. அதாவது பாடசாலைக்கும் வீட்டிற்குமிடையான உரையாடல், வகுப்பிற்கான பெற்றோர் கூட்டம், அத்துடன் முக்கிய விடயங்களான பாடப்படிப்பு, வகுப்பின் சமூக பரிமாற்றம், மதுபழக்கம் போன்றவை சம்மந்தமான பின்னேரக்கூட்டங்கள் இதற்கு எடுத்துக்காட்டாகும். மேலும் உத்தியோகபூர்வமற்ற தொடர்புகளான தொலைபேசித்தொடர்புகள், பிள்ளைகளை வகுப்பில் ஒப்படைக்கும்போது உண்டாகும் சந்திப்புகள் அல்லது பாடசாலை சம்மந்தமான பிக்னிக் போன்ற சந்தர்ப்பங்களில் ஏற்படும் சந்திப்புகளையும் உதாரணங்களாகக் கூறலாம்.

ஒரு மாணவர் வகுப்புக்கு பாடநேரத்தில் வராமலிருப்பதற்கு பாடசாலை அதிபரின் அனுமதியைப் பெறவேண்டும். ஆகவே ஒரு மாணவர் வகுப்புக்கு வராமலிருப்பதற்கான தகுந்த காரணத்தை பாடசாலைக்குத் தெரிவிக்கவேண்டும். ஒரு மாணவர் சுகயீனம் காரணமாக 2 வாரங்களுக்கு மேல் பாடசாலைக்கு வராமலிருப்பின் பாடசாலையானது வைத்திய அத்தாட்சிப்பத்திரம் சமர்ப்பிக்கும்படி கோரலாம்.

பிள்ளைகளின் பள்ளிப்பருவத்திற்கும், கல்விமுன்னேற்றத்திற்கும் பாடசாலை மட்டுமே பொறுப்பு அல்ல. இப்பொறுப்பு பெற்றோரையும் மாணவர்களையும்கூட சார்ந்ததாகும்.

# பெற்றோர்களின் செல்வாக்கு

*பாடசாலையின் நாளாந்த செயற்பாடுகள் சம்மந்தமாக பின்வரும் சந்தர்ப்பங்களில் பெற்றோருக்கு செல்வாக்குண்டு:*

- *பாடசாலை இயக்குனர்சபையின்* (skolebestyrelsen) *செயற்பாடு*
- *ஆசிரியர்களிடமோ அல்லது* pædagoger *ளிடமோ உரையாடுதல்*
- *வகுப்பில் நடைபெறும் பெற்றோர் கூட்டங்கள்* (forældremøder)
- *பெற்றோர் - வகுப்புசபை* (klasseforældreråd)
- *சகலபெற்றோருக்குமான பாடசாலை விழாக்கள், தகவற் கூட்டங்கள் அல்லது சில விடயங்கள்பற்றிய கூட்டங்கள்* (temaaftener)



# அதாவது....

பாடசாலை இயக்குனர்சபையானது பாடசாலைக்கும் வீட்டிற்குமிடையேயான ஒத்துழைப்பு சம்மந்தமான விதிமுறைகளை நிறைவேற்றுகிறது. இவ்விதிமுறைகளின் குறிக்கோளானது வீட்டிற்கும் பாடசாலைக்குமிடையேயான கலந்துரையாடல்கள், வகுப்புகளிடையே ஒழுங்கு செய்யப்படும் சமூகரீதியான நிகழ்ச்சிகள் என்பவற்றைக் குறைந்தபட்சம் கொண்டிருக்கவேண்டும். அநேகமான பாடசாலைகள் பெற்றோர்களை ஒரு வருடத்திற்கு ஓரிரு முறைகள் உரையாடலுக்கு அழைப்பார்கள். இதனால் ஒவ்வொரு மாணவரின் தனிப்பட்ட, சமூக கல்வி முன்னேற்றங்களைப்பற்றிய தங்கள் கருத்துக்களையும், தாங்கள் தனிப்பட்டரீதியாக அந்த முன்னேற்றத்துக்காக எவ்வாறு உதவலாம் என்பதையும் பகிர்ந்துகொள்ள சந்தர்ப்பமுண்டு.

சகல பெற்றோர்களுக்கும் வகுப்புரீதியான முன்னேற்றம்பற்றிய முக்கியமான விடயங்களை நேரடியாக ஆசிரியர்களுடன் கலந்துரையாடுவதற்கு வருடாந்த பெற்றோர் கூட்டங்களில் சந்தர்ப்பங்களுண்டு. இவ்விடயங்கள் வகுப்பின் சமூகரீதியான செயற்பாடு, கற்பித்தலின்நோக்கம், முறை, உள்ளடக்கம், பெற்றோருக்கும் ஆசிரியருக்குமான கூட்டுழைப்பின் முன்னேற்றம் போன்றவற்றை கொண்டிருக்கலாம். அநேனகமான பாடசாலைகளில் ஒவ்வொரு வகுப்புகளிலும் வகுப்பு-பெற்றோர்சபை(klasseforældreråd) தெரிவு செய்யப்படும். வகுப்பு-பெற்றோர்சபை ஆசிரியர்களுடன் இணைந்து பெற்றோர் கூட்டங்களை ஒழுங்குபடுத்துகிறது. மேலும் வகுப்பு சம்மந்தமான பலவிடயங்களைப் பற்றியும் அலசுகிறது. இதற்கு உதாரணமாக வகுப்பிற்கான நிகழ்ச்சிகளை, அல்லது சிறுவர்களுக்கிடையேயான குடிப்பழக்கங்கள், குற்றவியல் ஈடுபாடுகள் என்பவை சம்மந்தமான பொது நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல் என்பவற்றைக் கூறலாம். மேலும் வகுப்பு-பெற்றோர்சபை சுற்றுலா மற்றும் ஏனைய விழாக்களையும் ஒழுங்கு செய்ய முன்வரலாம். பாடசாலையும் பாடசாலை இயக்குனர்சபையும்(skolebestyrelsen) தகவற்கூட்டங்கள், ஏதாவது விடயங்களைப் பற்றிய கூட்டங்கள், பலதரப்பட்ட கொண்டாட்டங்கள் என்பவற்றை பெற்றோருக்காக ஒழுங்குசெய்ய முன்வரலாம். இவற்றிற்கு உதாரணமாக மாணவர்கள், பெற்றோர்கள், பாடசாலையில் பணியாற்றுவோர் சேர்ந்து பங்கேற்கும் வழக்கமான பாடசாலைக்கொண்டாட்டங்கள் என்பவற்றைக்கூறலாம். அத்துடன் பாடசாலை சகல பெற்றோரிடமும் உரையாட விரும்பும் விடயங்கள் பற்றிய பொதுவான கூட்டங்களையும் குறிப்பிடலாம். பாடசாலையின் பெறுமதியைப்பற்றி அல்லது பிள்ளைகளின் முன்னேற்றமும் சூழ்நிலையும் பற்றிய அல்லது பாடசாலையின் நாளாந்த செயற்பாடு முன்னேற்றம் ஆகியவற்றைப்பற்றிய பொதுவான கூட்டம் என்பவையும் இதற்கு எடுத்துக்காட்டாகும்.

பெற்றோர்களும் பிள்ளைகளின் முன்னேற்றத்திற்காக தங்களின் சொந்தத்திறமையை உபயோகித்து பங்களிப்பு செய்யலாம். இதற்கு உதாரணங்களாக வெளி ஆசிரியர்களாக(gæstelærere) செயற்படுதல், கல்வி வேலை வாய்ப்புகள் சம்மந்தமான தகவல்களை வழங்குதல் அல்லது மாணவர்களுக்கு செயல்முறைக்கல்விக்கான இடங்களை(praktikpladser) வழங்குதல் என்பவற்றைக் கூறலாம்.

பாடசாலைக்கான உயர்நிலை சட்ட விதிமுறைகளை உருவாக்குவதில் பெற்றோருக்கு நேரடியான செல்வாக்கு இல்லை. சட்டவிதிமுறைகள் பின்வருமாறு உருவாக்கப்படுகிறது:

- நாடாளுமன்றமானது நாட்டிலுள்ள அனைத்து பாடசாலைகளுக்குமான சட்டவிதிகளை (folkeskoleloven) நிறைவேற்றுகிறது.
- கல்வியமைச்சர் கட்டாயமாகக் கடைப்பிடிக்கவேண்டிய விதிகளை நாடுமுழுவதும் உள்ள சகலபாடசாலைகளுக்கும் அனுப்புவார்.
- Kommuner களும் amtskommuner களும் சம்மந்தப்பட்ட மாவட்டங்களுக்குள் அமைந்துள்ள பாடசாலைகளுக்குரிய விதிகள், குறிக்கோள்களை பாடசாலைச் சட்ட எல்லைக்குள் அடங்கியதாக உருவாக்குவார்கள்
- பாடசாலை இயக்குனர்சபை (skolebestyrelsen) தங்கள் பாடசாலைக்கு ஏற்றவாறு விதிகளை அமைப்பர்

நகர இயக்குனர்சபை(kommunalbestyrelsen) பாடசாலைகள், பாடசாலை சட்டங்களுக்கு ஏற்ப எவ்வாறு இயங்கவேண்டும் என்கின்ற விதிகளை வரையறுப்பர். ஒவ்வொரு வகுப்புக்கும் எவ்வாறு பாடநேரங்கள் பங்கிடப்படவேண்டும் என்பதை பாடசாலை இயக்குனர்சபையே முடிவு செய்வர் என்பதை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

# உதாரணங்கள்

## பாடசாலைக்கும் வீட்டுக்குமான கூட்டுழைப்பு பற்றிய விடயங்கள்.



”மேலும் வேறு நான்கு பெற்றோர்கள் ஜனவரி மாதத்தின் வெவ்வேறு காலகட்டங்களில் பனிச்சறுக்கு விடுமுறையின் காரணமாக தங்கள் பிள்ளைகளை பாடசாலையிலிருந்து விடுமுறை அளிக்கும்படி வகுப்பாசிரியரைத்தொடர்பு கொண்டுள்ளார்கள். இந்த விடுமுறையினால் சம்மந்தப்பட்ட மாணவர்களினதும், அவர்களுடன் இணைந்து கற்கவேண்டிய மாணவர்களினதும் கல்வி கற்பதில் தொடர்ச்சியின்மை ஏற்படும்.”

# வகுப்புநேரங்களிலிருந்து விடுமுறை

டிசம்பர் மாத நடுப்பகுதியில் லீன தனது தொடர்புப் புத்தகத்தை(kontaktbog) வகுப்பாசிரியரிடம் கொடுக்கிறாள். லீனவின் குடும்பம் பனிச்சறுக்கு விளையாட்டுக்காக நோர்வே நாட்டுக்குப் போகவுள்ளதால் அவளின் பெற்றோர்கள் நத்தார்ப்பண்டிகையைத் தொடர்ந்து அடுத்ததாக வரும் முதல் வாரத்தில் வகுப்புப்பாடங்களில் இருந்து அவளுக்கு பாடநேரங்களில் இருந்து விடுதலை அளிக்குமாறு அவளின் பெற்றோர்கள் வேண்டுகின்றனர். பாடநேரங்களில் இருந்து விடுதலை அளிப்பது சம்மந்தமாக பாடசாலை அதிபரே முடிவு எடுப்பார். எனவே வகுப்பாசிரியர் அந்த தொடர்புப்புத்தகத்தை அதிபரிடம் கையளிக்கிறார்.

விடுதலை வேண்டப்பட்ட நாட்களில் ஏதேனும் முக்கிய பாடங்கள் கற்பிக்கப்படுமா என்று வகுப்பாசிரியரை அதிபர் கேட்கிறார். நத்தார் பண்டிகைக்கு பின் வகுப்பானது புதிய பாடம் ஒன்றைத் தொடங்கவிருப்பதால் அதற்குரிய அறிமுகம் முதல் வாரத்தில் நடக்கவிருப்பதை வகுப்பாசிரியர் சுட்டிக்காட்டுகிறார். இதன் விளைவுகள் என்னவென்றால் வகுப்பில் நடைபெறும் பொது அறிவிப்பு, காட்டப்படும் படங்கள், வெளி ஆசிரியர்களின்(gæstelærer) கற்பிப்பு, வெளியிடங்களைப் பார்வையிடுதல் ஆகிய சந்தர்ப்பங்கள் லீனவுக்குக் கிடைக்காது. அத்துடன் வேறு நான்கு பெற்றோர்கள் ஜனவரி மாதத்தின் வெவ்வேறு காலகட்டங்களில் பனிச்சறுக்கு விடுமுறையின் காரணமாக தங்கள் பிள்ளைகளை பாடசாலையிலிருந்து விடுவிக்கும்படி வகுப்பாசிரியரைத் தொடர்புகொண்டுள்ளார்கள். இதன் விளைவாக சம்மந்தப்பட்ட மாணவர்களினதும் அவர்களுடன் இணைந்து கற்கவேண்டிய மாணவர்களினதும் கல்வி கற்பதில் தொடர்ச்சியின்மை ஏற்படுகிறது.

இவற்றை அடிப்படையாகக்கொண்டு பாடசாலை அதிபர் லீனவுக்கு விடுமுறையளிக்க மறுக்கிறார். அத்துடன் லீனவின் பெற்றோரை பாடசாலையின் குளிர்கால விடுமுறைநேரத்தில்(vinterferie) பயணத்தை மேற்கொள்ளுமாறு அறிவுரை கூறுகிறார்.




“முகாம்பாடசாலையானது (lejrskolen) பாடத்திட்டத்தில் ஒரு பகுதியாகும். இது மாணவர்களுக்கு செய்முறை அனுபவங்களை பெறுவதற்கு சந்தர்ப்பம் அளிக்கிறது. ஆசிரியர்களின் வழிநடத்தல், கண்காணிப்புகளுக்குக் கீழே பாதுகாப்பான சூழலில் இந்த கற்பிப்பு நடைபெறுகிறது.”

# முகாம்பாடசாலை(lejrskole) -ஒரு வித்தியாசமான கற்பிப்பு

6ஆம் வகுப்பு மாணவர்கள் அவர்களது ஆசிரியருடன் சேர்ந்து முகாம் பாடசாலையொன்றுக்கான திட்டமிடுகிறார்கள். இது ஃபூர்(Fur) தீவில் 3 நாட்கள் நடைபெறவுள்ளது. மண்அமைப்பைப்பற்றிய அறிவையும், தெளிவையும் அடைவதே இந்த முகாம்பாடசாலையின் நோக்கமாகும். இந்த பயணம் மாணவர்களின் ஆர்வங்களுக்கு ஈடுகொடுக்கக்கூடியதாக அமையவேண்டும். மாணவர்களை வியப்படைய வைத்து அதன்மூலம் அவர்களுக்கிடையே வினாக்களை உருவாக்கி பரிசோதனைகள் செய்வதன்மூலம் விடைகாண வைக்க வேண்டும்.

எவ்வாறு பலதரப்பட்ட மணற்படைகள் களிமண்சரிவுகளில் படிந்துள்ளன என்பதையும், எவ்வாறு பனிக்காலம்(Istiden) இயற்கையை உண்டாக்கியுள்ளது என்பதையும் மாணவர்கள் பார்வையிடவேண்டும். அவர்கள் மண்வகைகளின் வேறுபாடுகளை உணரவேண்டும். இத்துடன் அவர்களாகவே நேரடியாக களியை இயற்கையையிலிருந்து எடுத்து பதப்படுத்திப் பார்க்கவேண்டும். அந்தத் தீவின் அரும்பொருட்காட்சிசாலையில் களிமண்சரிவு களிலிருந்து தோண்டியெடுக்கப்பட்ட, கல்லாகிவிட்ட பொருட்களை பார்வையிடவேண்டும். பூமியானது கடந்த காலங்களைப்பற்றிய தகவல்களைக்கொண்டுள்ளது என்பதைப்பற்றி அவர்கள் அறிந்துகொள்ள வேண்டும்.

இந்த முகாம்பாடசாலை கற்பித்தலில் ஒரு பகுதியாகும். இது மாணவர்களுக்கு செய்முறை அனுபவங்களை பெறுவதற்கு சந்தர்ப்பம் அளிக்கிறது. ஆசிரியர்களின் வழிநடத்தல், கண்காணிப்புகளுக்குக்கீழே பாதுகாப்பான சூழலில் இந்த கற்பிப்பு நடைபெறுகிறது.

சகல பெற்றோரும் தங்கள் பிள்ளைகளை பாதுகாப்புணர்வுடன் இந்தப்பயணத்திற்கு அனுப்பக்கூடிய வகையில் உணவு, மற்றும் இருப்பிட வசதிகள் பற்றிய நடைமுறை விடயங்கள், பெற்றோருடன் முன்னரே கலந்தாலோசித்து ஒழுங்குபடுத்தப்படுகிறது.




”குறிக்கோள் என்னவென்றால் ஒரு பொதுவான விடயம் பற்றிய படிப்பில் எல்லோரும் தங்கள் சொந்த செயற்பாட்டுக்கூடாகவும், மற்றவர்களின் செயற்பாடுகளை அறிந்து கொள்வதற்கூடாகவும் அறிவைப் பெருக்கிக்கொள்ள வேண்டும்.”

# ஒரு வகுப்பறையிலும் அதற்கு வெளியேயும் நடைபெறும் கற்பிப்புகள்

5ஆம் வகுப்பு மாணவர்கள் தங்கள் உள்ளூர்ப்பகுதியை ஆய்வு செய்கிறார்கள். இது தொடர்பாக அவர்களிடம் எழுந்துள்ள சில வினாக்களுக்கு விடைகளைஅறிய ஆவலாய் உள்ளனர். உதாரணமாக:

- அவர்களது நகரத்தைத்தாண்டிப் போகக்கூடிய ஒரு அதிவேகபாதை(motorvej) ஒன்று நிறுவப்படவுள்ளது. இதனால் நகரத்திற்கு வரக்கூடிய விளைவுகள் என்ன? இது நிறுவப்படவேண்டுமென்று யார் முடிவு எடுத்தார்கள்?

- ஒரு விளையாட்டரங்கம் ஒன்றைக்கட்டுவதற்கு நிதி வசதி இல்லாமல் இருக்கும்பொழுது, இன்னுமொரு கோயிலைக்கட்ட எவ்வாறு நிதி ஒதுக்கப்பட்டது?

எந்த விடயங்களில், பிரச்சனைகளில் மாணவர்கள் அதிக கவனம் செலுத்துகிறார்களோ அதிலேயே அவர்கள் ஈடுபடவேண்டும். அதற்கு அடுத்ததாக அவர்கள் எவ்வாறு இதற்கு விடை காணப்போகிறார்கள் என்பதையும் எவ்வாறு இதனால் ஏற்படும் அறிவை ஏனைய மாணவர்களுக்கு அறிவிக்கபோகிறார்கள் என்பதையும் விபரிக்கவேண்டும். குறிக்கோள் என்னவென்றால் ஒரு பொதுவான விடயம் பற்றிய படிப்பில் எல்லோரும் தங்கள் சொந்த செயற்பாட்டுக்கூடாகவும், மற்றவர்களின் செயற்பாட்டை அறிந்து கொள்வதற்கூடாகவும் அறிவைப் பெருக்கிக்கொள்ள வேண்டும்.

இப்படியான செய்முறை மாணவர்களுக்கு பெரிய கோரிக்கைகளை விடுக்கிறது. கற்பித்தலுக்கு ஆசிரியர்கள் பொறுப்பாக இருந்தாலுங்கூட மாணவர்கள் படிப்படியாக தீர்மானம் எடுக்கும் விடயங்களில் பங்குபெறவேண்டும். மேலும் தங்களுக்காகவும் மற்றவர்களுக்காகவும் பொறுப்புகள் ஏற்க கற்றுக்கொள்ளவேண்டும்.

பலதரப்பட்ட பிரச்சனைகளை பலதரப்பட்ட முறைகளில் ஒரே நேரத்தில் கையாளுவதுபற்றி பயிலுவதற்கு மிகவும் வளமான சந்தர்ப்பத்தை மாணவர்களுக்கு இக்கற்பிப்பு முறை அளிக்கிறது. தனிப்பட்ட மாணவரின் அறிவாற்றலையும், தகுதிகளையும், தற்போதைய முன்னேற்ற நிலையையும் அடிப்படையாகக்கொண்டு கற்பித்தல் அமையவேண்டும்.



"அவர்கள் இதற்கு என்ன செய்யலாம் என்பதைப்பற்றி கலந்துரையாடுகிறார்கள். படிப்படியாக பலதரப்பட்ட அபிப்பிராயங்களை நெருங்குகிறார்கள்."

## குளித்தல்

*ஹனார்டி உடற்பயிற்சி வகுப்பின் பின்னர் மிகவும் கவலையுடனிருக்கிறாள். உடற்பயிற்சி ஆசிரியர் அவளிடம் ஏன் கவலையாக இருக்கிறாய் எனக்கேட்க, அவள் தான் மற்ற பிள்ளைகளுடன் உடுப்பில்லாமல் குளிக்க முடியாது எனக்கூறுகிறாள். அவர்கள் இதற்கு என்ன செய்யலாம் என்பது பற்றி கலந்துரையாடுகின்றார்கள். படிப்படியாக பலதரப்பட்ட அபிப்பிராயங்களை நெருங்குகிறார்கள். உதாரணமாக ஹனார்டி ஆசிரியர்களின் குளியலறையை உபயோகிக்கலாம், மற்ற மாணவர்களுக்கு 10 நிமிடங்கள் முன்னாடியே குளிக்கலாம் அல்லது உள்ளாடையுடன் குளிக்கலாம்(மேலதிகமாக ஒரு சோடி உள்ளாடை கொண்டு வரலாம்), அல்லது குளியலறைக்கு ஒரு திரை மறைப்பைப் போட்டுக்கொள்ளலாம்.*

*உடற்பயிற்சி ஆசிரியர் பாடசாலை அதிபருடனும் ஹனார்டியின் பெற்றோரிடமும் இந்த அபிப்பிராயங்களைப்பற்றி ஆராய்கின்றார். இறுதியில் அனைவரும் குளியலறைக்கு ஒரு திரை மறைப்பைப்போடலாம் என்ற முடிவுக்கு வருகின்றனர்.*




”எந்த விடயங்களை கற்பித்தலில் கவனத்துக்கு எடுக்கவேண்டும் என்பது ஆசிரியருக்கு தெரியவேண்டும். எந்த உணவு தவிர்க்கப்படவேண்டும் அல்லது எந்த உணவை பாரம்பரிய உணவுக்கு ஈடாக வழங்கலாம் என்று ஆசிரியருக்குத்தெரியவேண்டும்.”

# மனையியல்

கோடைகால விடுமுறைக்குப் பின் வகுப்பில் மனையியல் பாடம் நடக்கவுள்ளது இந்தச்சந்தர்ப்பத்தில் பலதரப்பட்ட விடயங்களும் கவனத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்பது வகுப்பாசிரியருக்குத் தெரியும். கீற்றவுக்கு குளூடன் புரதம்(gluten) அடங்கிய உணவு ஒத்துகொள்ளாது. இரத்தத்திலுள்ள ஒரு வகையான திரவம் (plasma) உள்ளடங்கிய உணவு வகைகளை மிக்கேலின் சமயம் தடைசெய்கிறது. லீன மாமிசம் சாப்பிடுவதில்லை. மேலும் பாபாக் பன்றி இறைச்சி சாப்பிடக்கூடாது.

பெற்றோர் கூட்டத்தில் மனைவியல் பாடம் பற்றி அலசுவது முக்கியமானது. எந்த விடயங்களை கற்பித்தலில் கவனத்துக்கு எடுக்கவேண்டும் என்பது ஆசிரியருக்கு தெரியவேண்டும். எந்த உணவு தவிர்க்கப்படவேண்டும் அல்லது எந்த உணவை பாரம்பரிய உணவுக்கு ஈடாக வழங்கலாம் என்று ஆசிரியருக்குத் தெரியவேண்டும். ஆசிரியர் இவ்விடயத்தில் பெற்றோரின் ஆலோசனைகளைப்பெறுவது அவசியமானது, ஏனெனில் மாணவர்கள் ஒவ்வொருவரினதும் வேறுபட்ட தேவைகள் பூர்த்திசெய்யப்பட வேண்டியவாறு இந்தப்பாடம் திட்டமிடப்படவேண்டும்.

பெற்றோர்களிடம் எந்தெந்த விடயங்களை யார் யார் செய்வது என்பதுபற்றி ஒப்பந்தம் செய்யப்படுகிறது. சாப்பாட்டுக்குரிய விசேசமான மூலப்பொருட்களை கீற்ற வீட்டிலிருந்து கொண்டுவந்து தனது சாப்பாட்டைத்தானே தயாரிக்க முடியும். கீற்றவின் தாயார் இதை ஒழுங்கு செய்ய வேண்டும். இதற்கு மாணவர்கள் வகுப்பில் என்னென்ன தயாரிக்கபோகிறார்கள் என்பதை கீற்றவின் தாயார் முன்கூட்டியே அறிந்திருப்பது மட்டுமே அவசியமானது. அராபிய உணவு சம்மந்தப்பட்ட வகுப்பில் பாபாக்கின் தாயார் பங்குபற்ற விருப்பம் தெரிவித்துள்ளார்.

பெற்றோர்கூட்டத்தில் எல்லோருக்குமே திருப்தியளிக்கக் கூடிய தீர்வு வெற்றிகரமாக காணப்படுகிறது. இந்தத் தீர்வு கற்பித்தல் சம்மந்தமான ஒரு ஆக்கபூர்வமான உணர்வுகளுக்கும் பெற்றோர் ஒத்துழைப்பு சம்மந்தமான புதிய அத்தியாயங்களுக்கும் வழிவகுக்கும்.

# பாடசாலையின் (folkeskolen) குறிக்கோள்கள்

பாடசாலையானது பெற்றோருடன் சேர்ந்து மாணவர்களின் அறிவு, திறன், செயற்பாட்டுமுறை மற்றும் வெளிபடுத்தல் முறை ஆகியவற்றின் முன்னேற்றத்திற்கு செயற்படவேண்டும். இந்த முன்னேற்றங்களால் மாணவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தனிப்பட்டரீதியான வளர்ச்சியை பல துறைகளிலும் பெருக்கிக்கொள்ளலாம்.

மாணவர்களின் அனுபவங்களுக்கும், ஆர்வங்களுக்கும், ஆழ்ந்த ஈடுபாடுகளுக்குமான தளத்தை பாடசாலையானது ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும். இதனால் மாணவர்கள் ஏற்றுக்கொள்ளும் தன்மை, கற்றுக்கொள்ளும் ஆர்வம், கற்பனாத்திறன் ஆகியவற்றில் அபிவிருத்தியடைகிறார்கள். இதன் பலனாக மாணவர்கள் ஒரு விடயம் சம்மந்தமாக எப்படி முடிவெடுப்பது, எப்படி கையாளுவது என்பதில் முதிர்ச்சியடைகின்றனர்.

மாணவர்கள் டெனிஷ் கலாச்சாரத்தில் சரளமாகப் பழகக் கற்றுக் கொள்வதற்கும், வேறுகலாச்சாரங்களையும், இயற்கைக்கும் மனிதனுக்குமான தொடர்புகள் பற்றிய விடயங்களையும் விளங்கிக் கொள்வதற்கும் பாடசாலையானது செயற்படவேண்டும்.
ஒரு சுதந்திர சனநாயக சமுதாயத்தில் தீர்மானங்களில் பங்குகொள்ளுதல், பொறுப்புகளில் பங்கேற்றல், உரிமைகள், கடமைகள் ஆகிய விடயங்களில் மாணவர்களை பாடசாலை தயார்படுத்தவேண்டும். ஆகவே பாடசாலையின் நாளாந்த செயற்பாடுகள், கற்பித்தல் என்பவை அறிவுச்சுதந்திரம், சமத்துவம், சனநாயகம் ஆகியவற்றை அடிப்படையாக் கொண்டிருக்கவேண்டும்.

பாடசாலை ஒன்றை இயக்குவது நகர சபையின் பணியாகும். சகல மாணவர்களும் அங்கு இலவசக்கல்வி வழங்குவது நகர இயக்குனர்சபையின் (kommunalbestyrelsen) கடமையாகும். நகர இயக்குனர்சபை பாடசாலைகள் பாடசாலைச்சட்டங்களுக்கேற்ப எவ்வாறு இயங்கவேண்டுமென்று விதிகளை வரையறுப்பர்.

ஒவ்வொரு பாடசாலையும் folkeskolen உடைய குறிக்கோளுக்கு ஏற்றவாறு கற்பித்தலின் தரத்தை தரப்பட்ட சட்ட எல்லைக்குள் கொண்டிருக்கக் கடமைப்பட்டுள்ளது. இதற்கேற்ப பாடசாலையானது கற்பித்தலை தானாகவே அமைத்து செயற்படுத்தவேண்டும்.

பெற்றோர்களும் மாணவர்களும் folkeskolen உடைய குறிக்கோள்களுக்கு ஏற்றவாறு பாடசாலையுடன் ஒத்துழைக்கவேண்டும்.

## பின்வரும் வெளியீடுகளில் மேலதிகமான தகவல்களுண்டு

---

### கல்வியமைச்சகத்தின் இன்டர்நெட் சேவையிலிருந்து (www.uvm.dk) ஆழ்ந்த தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்

**”Love og regler”, ”Folkeskolen” என்பவற்றிற்குக்கீழே பின்வருவனவற்றையும் அறியலாம்**

Bekendtgørelse af lov om folkeskolen (Folkeskoleloven)

**மேலதிக சட்ட விதிமுறைகள்**

Bekendtgørelse om formålet med undervisningen i folkeskolens fag og obligatoriske emner med angivelse af centrale kundskabs- og færdighedsområder

Bekendtgørelse om tilsyn med folkeskolens elever i skoletiden

Bekendtgørelse om befordring af elever i folkeskolen

Bekendtgørelse om foranstaltninger til fremme af god orden i folkeskolen

Bekendtgørelse om valg af forældrerepræsentanter til skolebestyrelser i folkeskolen

Bekendtgørelse om sygeundervisning for elever i folkeskolen og visse private skoler

Bekendtgørelse om folkeskolens undervisning i dansk som andetsprog

Bekendtgørelse om folkeskolens modersmålsundervisning af børn fra medlemsstater i Den Europæiske Union, fra lande, som er omfattet af aftalen om Det Europæiske Økonomiske Samarbejdsområde, samt fra Færøerne og Grønland

Bekendtgørelse om folkeskolens specialpædagogiske bistand til småbørn

Bekendtgørelse om faget tegnsprog i folkeskolen

Bekendtgørelse om folkeskolens specialundervisning og anden specialpædagogiske bistand

### சட்ட வழிகாட்டிகள்

Vejledning om tilsyn med folkeskolens elever i skoletiden

Vejledning om foranstaltninger til fremme af god orden i folkeskolen

Vejledning om ekskursioner, lejrskoler og skolerejser mv. i folkeskolen

Vejledning om folkeskolens indsats over for elever, hvis udvikling kræver en særlig hensyntagen eller støtte

### ”Udgivelser”, ”Online publikationer”, ”Grundskolen” என்பவற்றிற் குக்கீழே பின்வருவனவற்றையும் அறியலாம்

Elever der forstyrrer undervisningen for sig selv og andre i folkeskolen. Redegørelse til Folketinget

Faghæfter om samtlige fag i folkeskolen www.klaremaal.uvm.dk

Handicappede elever i idrætsundervisningen

Heldigvis er vores folkeskole for alle

Læsning – hvordan får vi godt begyndt?

Mobning skal ud af skolen

Skolebestyrelsen – i alt 8 hæfter

Skolebestyrelsesvalg 2001. En håndbog

Skolen og specialundervisning – om at lave individuelle undervisningsplaner

Tosprogede børn og unge – 4 års skoleudvikling

Undervisning af elever med læsevanskeligheder

Undervisning af elever med synshandicap

Undervisning af elever med tale/sprogvanskeligheder

Kulør på skoleudvikling

**Rettigheder og pligter i folkeskolen / Tamil**

Tegninger: Hasan Güngör
Grafisk tilrettelægning: Schwander Kommunikation

1. udgave, 1. oplag, december 2002: 2.200 stk.

ISBN 87-603-2234-9
ISBN (WWW) 87-603-2236-5

Udgivet af Undervisningsministeriet, Område for grundskole og folkeoplysning

Bestilles (UVM 5-417) hos:
Undervisningsministeriets forlag
Strandgade 100 D
1401 København K
Tlf. nr. 3392 5220
Fax nr. 3392 5219
E-mail: forlag@uvm.dk
eller hos boghandlere

Tryk: Franzen Offset A/S

Printed in Denmark 2002